REGISTERED AS A CATHOLIC WEEKLY. P.197

# பாதுகாவலன்

PATHUKAVALAN

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வாரஏடு

மலர் 124 இதழ் 07 விலை ரூபா 5 15வைகாசி–31 வைகாசி 1999

**பங்குகளில் பாதுகாவலன் விற்பனை விபரம்**

| | | |
|---|---|---|
| மல்லாகம் | - | 20 |
| கொழும்பு | - | 288 |
| மாம்புரி | - | 10 |
| பாசறை | - | 10 |
| முருல்சிமா | - | 15 |
| மட்டக்களப்பு | - | 16 |
| தலைமன்னார் | - | 20 |

UNIVERSITY OF JAFFNA LIBRARY 07 JUN 1999 PERIODICALS DIVISION

# குழம்பித் தவிக்கும் சிறார்களை வழிநடத்துக



முன் பள்ளி ஆசிரியருக்கான பயிற்சிக் கருத்தரங்கில் மனித முன்னேற்ற நிலைய இயக்குனர் அருட்திரு ஜெயக்குமார் அடிகள் உரையாற்றுவதையும், அருட்திரு நேசராஜா அடிகள் இருப்பதையும் படத்தில் காணலாம்.

- உளவியல்துறை நிபுணர் அருள்திரு எஸ். டேமியன் -

"நாட்டின் இன்றைய அமைதியற்ற சூழ்நிலையால் எத்தனையோசிறார்கள் குழம்பித்தவிக்கிறார்கள். அவர்களை இனங்கண்டு வழிநடத்தும் பணி முன்பள்ளி ஆசிரியர்களாகிய உங்களுடையது" என மனித முன்னேற்ற நிலையம் முன்பள்ளி ஆசிரியர்களுக்காக நடத்திய பயிற்சிக் கருத்தரங்கில் உளவியல் பயிற்சியளித்த அருட்திரு டேமியன் அவர்கள் கூறினார். இக்கருத்தரங்கு சித்திரை 20ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை நடத்தப்பட்டது.

இக்கருத்தரங்கில் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் வடக்கு, கிழக்கு, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 61 பேர் பயிற்சி பெற்றனர். உளவியல்துறை நிபுணர் அருட் தந்தை எஸ். டேமியன் உட்பட பத்து விரிவுரையாளர்கள் இப் பயிற்சியை நெறிப்படுத்தினர்.



உரைக்கு செவிமடுக்கும் முன்பள்ளி ஆசிரியர்கள்

அருட்தந்தை டேமியன் அவர்கள் தற்கால சூழ்நிலையில் குழம்பித் தவிக்கும் சிறார்களை இனம்கண்டு, அவர்களை வழிநடத்தும் பொறுப்பு முன்பள்ளி ஆசிரியருக்கு உண்டு. சேவை மனப்பான்மையுடன் அவர்கள் அதை நிறைவேற்ற வேண்டுமென்பதை வலியுறுத்தி அதற்கான பயிற்சியையும் அளித்தார்.

சான்றிதழ் வழங்குகையில் இயக்குநர் அருட்திரு சி. ஜி. ஜெயக்குமார் அவர்கள் "எதிர்கால சமுதாயம் நல்ல முறையில் உருவாகுவதற்கு முன்பள்ளி ஆசிரியர்களின் பொறுப்பு பிரதானமானதாக இருப்பதால் அவர்கள் தகுந்த முறையில் உருவாக்கப்பட வேண்டும். இப் பயிற்சியின்போது நீங்கள் பெற்றுக் கொண்ட திறனைக் கொண்டு உங்கள் கையில் ஒப்படைக்கப்பட்டுள்ள சிறாரின் எதிர்காலத்தை உருவாக்குவது உங்கள் பொறுப்பு" என்று கூறினார்.

## வியட்நாம்:

# புதிய பைபிள் மொழிபெயர்ப்பு

புனித விவிலியத்தை வியட்நாமிய மொழியில் மொழி பெயர்க்க 28 ஆண்டுகளாக நடைபெற்று வந்த பணி தற்போது நிறைவுபெற்றுள்ளது. 21 பேரின் அயரா முயற்சியினால் உருவாகிய இந்நூல் மூலம் பிரதிக்கு மிக நெருக்கமாகவும், அதே வேளையில் சாதாரண கிறிஸ்தவரும் வாசித்து விளங்கக் கூடிய எளிய மொழி நடையிலும் அமைந்துள்ளது.1971இல் சங்கீதங்களை மொழிபெயர்ப்பதுடன் ஆரம்பித்த இப்பணி பின்னர் புதிய ஏற்பாட்டு நூல்களையும் இறுதியாக பழைய ஏற்பாட்டு நூல்களையும் மொழிபெயர்ப்பதுடன் முற்றுப் பெற்றது.

# மாதமொரு திருப்பலி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள குழந்தை யேசு திருத்தலத்தில் தற்பொழுது மாதமொரு முறை பொதுத் திருப்பலி நிறைவேற்றப்படுகின்றது.

கரவெட்டி பங்குத்தந்தையின் மேற்பார்வையின் கீழ் இவ் ஆலயத்தில் வழிபாடுகள் மற்றும் திருச்சடங்குகள் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

இவ் வைத்தியசாலையில் கடமை புரியும் கத்தோலிக்க ஊழியர்கள் மற்றும் நோயாளர்கள்மட்டுமின்றி கரவெட்டி, துன்னாலை, பருத்தித்துறை, புலோலி பங்குகளைச் சேர்ந்த கத்தோலிக்க மக்களும் இவ்வாலய வழிபாடுகளிலும், பரிபாலனத்திலும் அக்கறை காட்டிவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியான மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர். எஸ். கதிரவேல்பிள்ளை ஆலயவழிபாடுகளுக்கு தனது ஒத்துழைப்பை வழங்கிவருகின்றார்.

தகவல்
F.X. கிறிஸ்ரி ரஞ்சன்

# தன் இரத்தத்தால் இயேசுவை வரைந்த ஓவியர்

இந்தியாவின் அசாம் மாநிலத்திலுள்ள ஓர் இந்து ஓவியர் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் ஓவியத்தைத் தன் இரத்தத்தால் வரைந்துள்ளார்.

28 வயதான கௌதம் பர்தான் என்னும் இவ்வோவியர் இயேசுவின் பாடுகள் தனக்கு எப்போதும் தூண்டுதல் அளித்து வந்துள்ளதாகவும், அவரது மாபெரும் பலியை நினைவுகூர சில துளி இரத்தத்தைச் சிந்துவது ஒரு பெரும் பேறு எனத் தாம் நினைப்பதாகவும் அவர் கூறினார். அசாமிலுள்ள குவஹாதி நகரில் பெரிய வெள்ளி வழிபாட்டின்போது இன ஒருமைப்பாட்டையும் சமாதானத்தையும் பேணுவதற்கு மக்கள் தியாகம் செய்ய வேண்டிய அவசியத்தை நினைவூட்டும் பொருட்டு தாம் அதைச் செய்ததாக அவர் கூறினார்.

இப்பிரதேசத்தில் வாழ்ந்து வரும் ஏழு இனக் குழுக்கள் தம்முள் சண்டையிட்டு வந்ததால் ஆண்டுதோறும் உயிர்ச்சேதம் ஏற்படுவதோடு நூற்றுக்கணக்காக குடும்பங்கள் இடம் பெயர வேண்டியும் உள்ளது. (தகவல் : யூக்கன்)

# மிதிவெடிகளை ஒழிக்கும் சர்வதேச உடன்படிக்கை

மிதிவெடிகளின் உபயோகத்தைத் தடைசெய்யும் சர்வதேச உடன்படிக்கையொன்று மார்ச் 1ஆம் திகதி ஒட்டாவாவில் அமுலுக்கு வந்துள்ளது. இந்த உடன்படிக்கையில் 134 நாடுகள் கைச்சாத்திட்ட போதிலும் 65 நாடுகளே இதனைச் சட்டபூர்வமாக அங்கீகரித்துள்ளன. மிதி வெடிகளின் உற்பத்தி. சேகரிப்பு, கைமாற்றம், பாவனை ஆகியவற்றைத் தடைசெய்வதே இந்த உடன்படிக்கையின் நோக்கமாகும். பல்வேறு தனியார் அமைப்புக்கள், சர்வதேச நிறுவனங்கள். அரசாங்கங்கள் ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் இந்த உடன்படிக்கை நிறைவேறியது. ஆயினும் இதிலுள்ள அம்சங்கள் அனைத்தும் முழுமையாக நிறைவேற்றப்படும் வரை இது பெயரளவிலான ஓர்ஒப்பந்தமாகவே இருக்கும்.

ஆண்டு தோறும் 24,000 பேர் மிதி வெடிகளினால் பாதிப்படைகின்றனர். இவர்களுள் 13 வீதத்தினரே யுத்த நடவடிக்கைகளின் போது காயமடைந்தவராவர்.

## இலங்கை:

# நடன வடிவில் விவிலியம்

யேசு சபையைச் சேர்ந்த அருட்தந்தை யோசவ் மேரி வேதாகம நிகழ்ச்சிகளை நாட்டிய நாடக வடிவில் தயாரித்துள்ளார். இதிலுள்ள நடனங்கள் பரத நாட்டியத்தையும், கிராமிய நடனங்களையும், திரைப்பட நடனங்களைத் தன்னும் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளன. இது திறந்த பல்கலைக்கழகத்தில் மேடையேற்றப்பட்டது.

# மறை அறிவையும் ஒழுக்கத்தையும் ஊட்டி வளர்க்க வேண்டியது பெற்றோரின் கடமையாகும்

- அருள்திரு எட்வின் வசந்தராஜா -

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் "ஈஸ்ரர் விழா" கலை நிகழ்ச்சிகள் 18.04.99 ஞாயிற்றுக்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது. பங்குத் தந்தை அருட்திரு சாள்ஸ் கொலின் அடிகளாரும் அருட்திரு எட்வின் வசந்தராஜா அ.ம.தி. அடிகளாரும் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர் தொடர்ந்து நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் தீபநடனம், பரத நாட்டியம், கோலாட்டம், சிறுவர் நாடகங்கள், தாளலயம் என்பன இடம் பெற்றது. மறைக்கல்விப் போட்டிகளுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

இன்றைய சூழ்நிலையில் சிறுவர்களின் ஆக்கத்திற்கும் நற்செயற்பாட்டிற்கும் பெற்றோரும் பெரியோரும் தடையின்றி ஊக்கமளிக்க முன்வர வேண்டும். மறையறிவையும், ஒழுக்கத்தையும் பிள்ளைகளுக்கு ஊட்டி நற்பிரசைகளாக உருவாக்க வேண்டியது ஒவ்வொரு பெற்றோரின் கடமையாகும் என அருட்திரு எட்வின் வசந்தராஜா அடிகள் தமது உரையில் தெரிவித்தார். இறுதியாக இளைஞர் உருவாக்கல் அமைப்பினரின் 'விசுவாச விழுதுகள்' நாடக நிகழ்வுடன் "ஈஸ்ரர் விழா" நிறைவுபெற்றது.

தகவல் எஸ். யேசுதாஸ்
கொழும்புத்துறை நிருபர்

## மியான்மார் :

# பிரதேச மொழியில் விவிலியம்

யாங்கோனைச் சேர்ந்த பிநா ஸ்ரீவன் அனோ என்பவர் மியான்மாரிலுள்ள 70,000 ஆக்ஹா இன கத்தோலிக்கருக்காக விவிலியத்தை மொழி பெயர்த்து வருகிறார். புதிய ஏற்பாட்டை ஆக்ஹா மொழியில் அச்சேற்ற இருக்கும் இவர் தொடர்ந்து பழைய ஏற்பாட்டையும் மொழி பெயர்க்க இருக்கிறார்.

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும் (தி. பா. 127. 1 )**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தொடர்புசாதனங்கள்

இன்றைய மக்களின் நாளாந்த வாழ்வில் இடம் பெற்றுவிட்ட ஒரு முக்கிய அம்சம் தொடர்பு சாதனங்களாகும். தமது வாழ்க்கையை இலகுவாக்கவும், தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும் மக்களுக்கு உதவுவதுடன் இன்பப் பொழுதுபோக்குகளையும் இது அளித்துவருகிறது.

நன்மைக்காகப் படைக்கப்பட்ட எத்தனையோ காரியங்கள் இன்று தீமைக்குப் பயன்படுத்தப் படுவதைக் கண் கூடாகக் காண்கின்றோம். தொடர்பு சாதனங்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

செய்திப் பரிமாற்றத்திலும், அறிவியற் துறையிலும், பொழுதுபோக்குத் துறையிலும், தொழிற் துறையிலும் தொடர்புசாதனங்களின் பங்கு அளப்பரியதாக இருப்பதால் மக்கள் மத்தியில். அவற்றிற்கு இருக்கும் செல்வாக்கும்பெரிது. தொடர்பு சாதனங்களுக்குப்பொறுப்பானவர்கள் தமது கையில் எவ்வளவு சக்தி வாய்ந்த ஆயுதம் உள்ளதென்பதை உணர்ந்துள்ளனர். நேர்மையானவர்கள் அதனைத் தக்க விதத்தில் கையாண்டு நன்மை விளைப்பது போலவே வேறு பலர் தமது சுய நலத்திற்காக அதனைத் துஷ்பிரயோகம் செய்கின்றனர்.

தகவல்களையும் உண்மையையும் மக்களுக்குப் பரப்ப வேண்டிய எத்தனையோ பிரசுரங்கள் உண்மையைத் திரித்துக் கூறி மக்களை ஏமாற்றுகின்றன.

மக்களுக்கு அறிவூட்டி, கலை வளர்ப்பதோடு பயனுள்ள இன்பப் பொழுது போக்காக விளங்க வேண்டிய சினிமாவும் தொலைக்காட்சியும் ஆபாசமான காட்சிகளால் இளம் உள்ளங்களில் நஞ்சூட்டுவதுடன், பயனற்ற விதத்தில் பொழுதைக் கழிக்க வழி செய்து கொண்டிக்கின்றன. புதுப்புது சாதனங்கள் உருவாக உருவாக இன்னும் பெருந்தொகையான மக்கள் இதன் வலையில் அகப்பட நேருகிறது.

தொடர்புசாதனங்கள் இருக்கும்வரை அவற்றைத் துஷ்பிரயோகம் செய்பவர்களும் இருக்கத்தான் செய்வார்கள். ஆகவே தொடர்புசாதனங்களைப் பயன்படுத்துபவர்கள்தான் பகுத்தாய்வு செய்து நல்லனவற்றை ஏற்று தீயனவற்றை நீக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். தாம் அளிக்கும் ஆதரவு, தமது விமர்சனங்கள் மூலம் நல்லவை தழைக்கவும் தீயவை கழியவும் துணைபுரியலாம்.

தொடர்புசாதனங்களின் சக்தியை உணர்ந்த எமது திருத்தந்தை அது அழிக்கும் சக்தியாக இராமல் ஆக்கும் சக்தியாக விளங்க வேண்டும் என்பதுடன் உண்மைக்கு சான்று பகர அவற்றுக்கிருக்கும் பொறுப்பினையும் வலியுறுத்துகிறார். அது மட்டுமல்லாது தொடர்பு சாதனங்கள் மனிதனது ஆன்மீகப் பயணத்தில் உற்ற துணையாக விளங்கலாம் என்று கூறி ஆன்மீகத் துறையில் தொடர்பு சாதனங்களுக்கும் இடமுண்டு என்பதை எடுத்துக் காட்டியுள்ளார்.

# 33வது உலக தொடர்பு சாதனங்கள் தினத்தையொட்டி

# திருத்தந்தை விடுத்த செய்தி

"தொடர்பு சாதனங்கள் தந்தையைச் தேடிச்செல்வோருக்கு ஓர் உற்ற துணை" என்பதே நாம் இவ்வாண்டு உலக தொடர்புசாதன தினத்துக்கென எடுத்துக் கொண்ட கருத்தாகும். இக் கருத்தில் இரு வினாக்கள் அடங்கியுள்ளன. தொடர்புசாதனங்கள் இறைவனுக்கெதிராக அல்லாமல் இறைவனோடு எவ்வாறு செயற்பட முடியும்? தமது வாழ்வில் இறைவனது அன்புப் பிரசன்னத்தைத் தேடிக்கொண்டிருப்பவர்களுக்கு தொடர்பு சாதனங்கள் எவ்வாறு உற்ற துணையாக விளங்கலாம்? இறைவனைத் தேடிக் கொண்டிருப்பவர்கள் பகுத்தறிவின் ஆட்சித் தளமாகிய இயற்கை நூலையும், விசுவாசத்தின் ஆட்சித் தளமாகிய இறைவெளிப்பாட்டு நூலாகிய வேதாகமத்தையும் புதிய விதத்தில் விளங்கிக்கொள்ள தொடர்பு சாதனங்கள் சில வேளைகளில் வாய்ப்பளிக்கின்றன என்ற உண்மையை இக் கருத்து உணர்த்துகின்றது. இறுதியாக சமூகத் தொடர்பு சாதனங்களுக்குப் பொறுப்பானவர்கள் மனித வாழ்வில் ஓர் அர்த்தத்தைக் கண்டுகொள்வதற்குத் தடையாயிராமல், துணைபுரிவதில் கூடிய ஈடுபாடு காட்டுமாறு அழைக்கின்றது.

தேடிச் செல்வதே மனித இயல்பாகும். மனிதனுடைய தேடுதலெல்லாம் ஈற்றில் இறைவனைத் தேடுவதிலேயே முடிவடையும். விசுவாசமும், பகுத்தறிவும் உண்மையைக் காண்பதற்கு மனித ஆன்மாவைத் தாங்கிச்செல்லும் இரு இறக்கைகளைப் போல இருக்கின்றன. உண்மையை, அதாவது தன்னை அறிய வேண்டுமென்ற ஆவலை இறைவன் மனித இதயத்தில் விதைத்துள்ளார். ஏனெனில் இறைவனை அறிந்து அன்பு செய்வதன் மூலம் மக்கள் தம்மைப் பற்றிய உண்மையை அறிந்து கொள்ள முடியும் . . . இன்றைய கலாசாரத்தில் தொடர்பு சாதனங்களுக்கு தனிச் செல்வாக்கு உண்டென்பதையும், வாழ்வையும், மனித மகத்துவத்தையும், எமது சுதந்திரத்தின் மெய்யான அர்த்தத்தையும், பரஸ்பர சார்பு நிலையையும் பற்றி உண்மைக்கு சான்றுபகர தொடர்பு சாதனங்களுக்கு விசேட பொறுப்புண்டு என்பதையும் இக் கருத்து ஏற்றுக்கொள்கின்றது. சகல விதமான ஒத்துழைப்பும் அனைவருக்கும் நன்மை பயப்பது என்பதையுணர்ந்து மனிதனின் தேடல் பயணத்தில் திருச்சபை தொடர்பு சாதனங்களை ஆதரிக்க விரும்புகிறது . . .

திருச்சபையின் கலாசாரமும் தொடர்பு சாதனங்களின் கலாசாரமும் வேறுபட்டவை என்பது உண்மையே. சில சந்தர்ப்பங்களில் இவற்றுள் மாறுபாடுகளும் உண்டு. ஆனால் வேறுபாடுகள் இருப்பதால் நட்புறவும், உரையாடலும் அசாத்தியமாகி விடவில்லை. எத்தனையோ ஆழமான நட்புறவுகளில் வேறுபாடுகளே ஆக்கத்திறனையும் இணைப்பையும் ஊக்குவிக்கின்றன.

தொடர்பு சாதனங்களின் சக்தி அழிக்கும் சக்தியாக இராமல், ஆக்கும் அன்பு சக்தியாக இருக்கவேண்டுமானால், அவை செய்திகளோடு நினைவூட்டலையும், தகவல்களோடு ஞானத்தையும், பொழுதுபோக்குடன் மகிழ்ச்சியையும் அளித்து மக்களுக்கு உற்ற துணையாக இருப்பது அவசியமாகும்.

திருச்சபையும், தொடர்பு சாதனங்களும் மனித குலத்தின் நன்மைக்காக ஒன்றுபட்டு உழைக்கும் என்ற நம்பிக்கையுடன் புதிய சகாப்தத்தை எதிர்நோக்குவோமாக.

# திருத்தந்தையின் செய்தி எழுப்பும் சில சிந்தனைகள்

❄ ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டுவரும் உலக தொடர்பு சாதனங்கள் தினமானது, தொடர்பு சாதனங்களின் தயாரிப்பாளர்களோடு மட்டுமல்லாது தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துபவர்களோடும் திருச்சபை கருத்துப் பரிமாற்றம் செய்வதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பமாகும்.

❄ தொலைக்காட்சியிலும் திரைப்படத் தொழிலிலும் ஏனைய தொடர்புசாதனங்களிலும் தயாரிப்பாளர்களும் தொழில் அதிபர்களுமே செல்வாக்குச் செலுத்துகின்றனர். "தத்துவம்" "மதநம்பிக்கை" போன்ற விடயங்கள் இவர்களது பட்டியலில் முதலிடம் வகிக்குமென எதிர்பார்க்க முடியாது. ஆகவே இது குறித்து ஒரு முக்கியமான சுற்றுமடலை வெளியிட்ட திருத்தந்தையின் துணிச்சல் பலரது கவனத்தை ஈர்த்துள்ளது.

"மனிதனது தேடுதல் எல்லாம் இறுதியில் இறை வனைத் தேடுவதிலேயே முடியும். உண்மையை அறிய வேண்டும் என்ற ஆவலை இறைவன் மனித இதயத்தில் பதித்துள்ளார்" என்று தமது சுற்றுமடலில் குறிப்பிட்ட கருத்தை தொடர்பு சாதனங்கள் தினத்துக்கான தமது செய்தியிலும் வலியுறுத்துகிறார்.

❄ இன்று இன்ரநெற்றும். சேய்மைக் கட்டுப்பாட்டுத்தொலைக் காட்சியும் தொடர்பு சாதனங்களிலிருந்து கிடைக்கின்ற ஏராளமான பல்திறப்பட்ட தகவல்களைக் கையாள்வதில் பெரிதும் பயன்படும் கருவிகளாக இருக்கின்றன. அறிவைத் தேடுபவர்களுக்கும் இன்பப்பொழுதுபோக்கைத் தேடுபவர் களுக்கும் எப்போதாவது போதுமென்ற திருப்தி ஏற்பட்ட துண்டா? சலிப்பு ஏற்படுவது சாத்தியமா? தேடும்போது நாம் தேடுவதை கண்டுபிடிக்காமலிருப்பதை விட, எமக்கு வேண்டியது என்ன என்பதை அறியாமல் இருப்பது தான் மோசமானது. எவ்வளவுதான் ஏராளமான தகவல்கள் கிடைத்தாலும், இன்பப் பொழுது போக்குகள் இருந்தாலும் இன்னும் சலிப்பும் அமைதியின்மையும் ஏற்படுவது சாத்தியமே.

திருத்தந்தை தமது செய்தியில் மனிதனது தேடலில் தொடர்பு சாதனங்கள் துணைபுரிய வேண்டுமேயொழிய தடையாக இருக்கக்கூடாது என்ற சுட்டிக் காட்டுகிறார்.

❄ பொய்யான அல்லது தவறான தகவலைத் தர முன்வரும் தொடர்புசாதனத்தினர் வெகு சிலரே. தமது உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலையிலும் உண்மையைத் தேடுவதில் அர்ப்பணிப்புடன் உழைக்கும் பத்திரிகையாளர் உலகில் உள்ளனர் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால் தொடர்பு சாதனங்கள் முக்கியமற்ற நிகழ்ச்சிகளிலும் அற்ப விடயங்களிலும் மூழ்கிப்போய் இருக்கின்றன. என அவதானிகள் பலர் கருதுகின்றனர். தமது வாழ்வில் அர்த்தத்தைத் தேடும் மக்கள் குழம்பு வதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

திருத்தந்தை வாழ்வு, மனிதமாண்பு, சுதந்திரம். பரஸ்பர சார்புநிலை ஆகியன பற்றிய உண்மைகளுக்கு சான்று பகர்வதில் தொடர்புசாதனங்களுக்கிருக்கும் பொறுப்பை வலியுறுத்துகின்றார்.

❄ விஞ்ஞான கண்டுபிடிப்புக்களுக்காக, சரித்திரத்தின் விளக்கத்துக்காக, தத்துவம், கொள்கைகள் ஆகியவற்றில் தெளிவை வேண்டி தேடுதல்செய்து வெற்றி கண்டவர்களின் உதாரணங்கள் வரலாற்றில் நிறைய உண்டு. இன்னும் செய்யவேண்டிய தேடுத்ல்களும் பல உண்டு. உதாரண மாக தீராத நோய்களுக்கு சிகிச்சை கண்டுபிடித்தல்.

❄ தொடர்பு சாதனங்களைப் பொறுத்தமட்டில் இவ்வளவு சாத்தியக் கூறுகள் உள்ளன. எமது தனிப்பட்ட தேடுதல் எமக்கும் பிறருக்கும் ஏதாவது நன்மை பயப்பதாகவும், இறுதியில் கடவுளிடம் வழி நடத்திச் செல்வதாகவும் இல்லாவிட்டால் அதைத் தொடர்வதில் பயனென்ன?

❄ எல்லாவற்றுக்கும் மேலாக நாம் உண்மையை கண்டு பிடிக்கும்போது அதை ஏற்றுக்கொள்ளவும் அதற்கமைய வாழவும் ஆயத்தமாக இருக்கிறோமா?

# இலங்கையில் வெளியாகும் சில கத்தோலிக்க இதழ்கள்

**யாழ்ப்பாணம் :**

| | |
|---|---|
| பாதுகாவலன் | - மறைமாவட்ட வெளியீடு |
| விருட்சம் | - கிளி-முல்லை மறைக்கோட்ட வெளியீடு |
| தேவதாயின் குரல் | - பாக்ஸ் கிறிஸ்டி |
| இறையியல் கோலங்கள் | - புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி |

**கொழும்பு :**

| | |
|---|---|
| மறை அரும்பு | - திருப்பால சபை வெளியீடு |
| எழுச்சி | - செடெக் வெளியீடு |
| வியாகுலத்தாய் | - வியாகுல அன்னை ஆலயம் |
| மறுமலர்ச்சி முத்துச்சரம் | - திரு யோசவ் யோகராஜா அருங்கொடை இயக்கம் |

**மட்டக்களப்பு :**

| | |
|---|---|
| வெட்டாப்பு | - மறைக்கல்வி நடுநிலையம் |
| தொண்டன் | - சமூகத்தொடர்பு நிலையம் |

**மன்னார் :**

| | |
|---|---|
| மன்னா | - மறைமாவட்ட வெளியீடு |

**கண்டி :**

| | |
|---|---|
| அருள் ஊற்று | - மறைமாவட்ட பொதுநிலையினர் அப்போஸ்தலிக்க பணிப்பிரிவு |

**காலி :**

| | |
|---|---|
| தாரகை | - மறைமாவட்ட வெளியீடு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத் தொடர்பு சாதனங்களுக்கு ஓர் அறிமுகம்

## பயிற்சிப் பட்டறை நிகழ்வுகள் — எவ்.எக்ஸ். கிறிஸ்ரி ரஞ்சன்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இரண்டாம் நாள் அமர்வு 'பாதுகாவலன்' எழுத்தாளர் மேரி நாயகி ஆசிரியையின் தொடக்கவுரையுடன் ஆரம்பமானது.

### பத்திரிகைக்கு பின்னால் இருப்பவை பல

அன்றைய தினம் சிறப்பு விரிவுரையாளராக உதயன் இணை ஆசிரியர் ந.வித்தியாதரன் அழைக்கப்பட்டிருந்தார்.

திரு. ந. வித்தியாதரன் சுமார் 3 மணி நேரத்திற்கும் மேலாக அதே மேடையில் நின்றவாறே தனது 15 வருடகால பத்திரிகைத்துறை அனுபவங்களை பயிற்சியாளர்களுக்கு நகைச்சுவை ததும்ப எடுத்துக் கூறினார். செய்திச் சேகரிப்பின்போது ஏற்பட்ட 'திரைக்குப் பின்னால்' ஆன பல அனுபவங்களை, தகவல்களை வித்தி பயிற்சியாளர்களுக்கு எடுத்துக் கூறினார். இதனால் பயிற்சியாளர்களுக்கு பல 'திகில்' அனுபவங்கள் கிட்டின. ஒரு செய்தியை வாசிக்கும் வாசகரொருவர் அச்செய்தியை சேகரிக்க பத்திரிகையாளர்கள் படும் பாட்டைப்பற்றி அறிந்து கொள்ள முடிவதில்லை அதுவும் யாழ்ப்பாண பத்திரிகைத்துறை கத்திமுனையில் நடப்பது போன்றது. 'வித்தி'யின் அனுபவங்கள் பயிற்சியாளர்களுக்கு இவற்றை நன்கு தெரிந்துகொள்ள வைத்தது. பத்திரிகைத்துறையும் ஒரு போதைவஸ்து போன்றது தான். இதனால் தான் பெரும் சிரமத்தின் மத்தியில் சட்டக் கல்லூரிக்கு அனுமதி பெற்று சட்டம் பயின்ற நான் இறுதியில் சட்டத்தரணியாகாமல் ஒரு பத்திரிகாசிரியராக இன்று உங்கள் முன் நிற்கவேண்டி ஏற்பட்டது என 'வித்தி' கூறியது பயிலுனர்களைச் சிந்திக்கத் தூண்டியது.

பத்திரிகைத்துறை தற்போது கணணி மயமாக்கப்பட்டு வருவதை கருத்தில் கொண்டோ என்னவோ இப்பயிற்சிப் பட்டறையை ஏற்பாடு செய்திருந்த 'பாதுகாவலன்' ஆசிரியர் அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் கணணி விரிவுரையாளர் எஸ். பிரபாகரனின் விரிவுரைக்கும் அங்கு ஏற்பாடு செய்திருந்தார்.

சமூகத்தொடர்பாடலில் கணணித்துறை என்னும் தலைப்பில் திரு. எஸ். பிரபாகரன் அங்கு விரிவுரையாற்றினார்.



கணணித் துறையின் நுட்பங்கள் பற்றி விளக்கு கிறார் திரு. எஸ் பிரபாகரன்

- 'கம்பியூட்டர்களினால் என்ன வேலை செய்யலாம் என்பதை வரையறுக்க முடியாது'
- தொடர்பாடலில் 'இன்டநெற்' மிகப் பெரியது.
- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கம்பியூட்டர்கள் இணைக்கப்பட்டிருந் தால் அது 'நெட்வேக்' ஆகும்.

போன்ற தகவல்களை இவரது விரிவுரையிலிருந்து பயிற்சியாளர்கள் பெற்றுக்கொள்ள முடிந்தது. பயிற்சிப்பட்டறையில் கலந்துகொண்டவர்களுக்கு பத்திரிகைத்துறை அனுபவசாலியான பி. கிறிஸ்ரி ரஞ்சன் செய்தி சேகரித்தல், அவற்றைத் தரம் பிரித்தல், எடிற் பண்ணல், பக்கமமைத்தல், ஒப்பு நோக்குதல் போன்றவை குறித்து விளக்கமளித்தார்.

இந்த இருநாள் அமர்வின் போது பயிற்சியாளர்கள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு இறுதியில் ஒவ்வொரு குழுவும் ஒரு பத்திரிகையென்ற அடிப்படையில் நான்கு பத்திரிகைகள் தயாரிக்கப் பட்டன.

### பாதுகாவலனுக்கே பெருமைசாரும்

இப்பத்திரிகைகள் ஒவ்வொன்றினதும் நிறை குறைகள்பற்றிய மதிப்பீட்டை பத்திரிகையாளர் பி. கிறிஸ்ரி ரஞ்சன் வழங்கினார்.

இப்பயிற்சியாளர்கள் உருவாக்கிய இப்பத்திரிகைகளை அவதானிக்கும்போது இவ்விரு நாள் அமர்வின் போது இவர்கள் பத்திரிகைத்துறை நுணுக்கங்களை எவ்வளவு தூரம் புரிந்து கொண்டுள்ளார்கள் என்பதை ஊகிக்க முடிகின்றது. இதன் மூலம் யாழ் பத்திரிகைத்துறைக்கு தரமான பத்திரிகையாளர்களை உருவாக்கிக் கொடுத்த பெருமையை 'பாதுகாவலனும்' அதன் ஆசிரியர் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரும் பெற்றுக் கொள்கிறார்கள் என



உரைக்கு ஆர்வ முடன் செவிமடுத் திருக்கும் பயிற்சி யாளர்கள்

தனது மதிப்பீட்டுரையில் குறிப்பிட்டார்.

இறுதியில் யாழ். ஆயர் பேரருட் திரு தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி அவர்களை வாழ்த்தி பட்டறை நிகழ்வை நிறைவு செய்து வைத்தார். எழுத்தாளர் திரு யோசப்பாலா பயிற்சிப் பட்டறைக்கான இணைப்பாளராகக் கடமையாற்றினார். 'பாதுகர்வலன்' ஆசிரியர் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் இவ்விரு நாள் அமர்வின்போதும் பயிலுனர்களுடன் உடனிருந்து பட்டறை சிறப்புடன் அமைய தன்னாலான உதவிகளை வழங்கினார்.

மொத்தத்தில் சிறந்த பத்திரிகையாளர்களை பாதுகாவலனுக்கும் இதர இதழ்களுக்கும் உருவாக்கிக் கொடுக்க 'பாதுகாவலன்' எடுத்த முயற்சி இவ் அமர்வின் மூலம் வெற்றி பெறுகின்றது என்பதே எல்லோரினதும் ஏகமனதான தீர்ப்பாகும்.

## அஞ்சலிக்கிறோம்

புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் கால்நூற்றாண்டுகளுக்கு மேலாகப்பணி புரிந்த பாண்டியந்தாழ்வைச் சேர்ந்த திரு. P. டென்னிஸ் அண்மையில் வன்னியில் காலமானார்.

அன்னாரின் ஆத்மாவுக்காகப் பிரார்த்திக்கும் அதே வேளையில் அவரின் குடும்பத்தவர்க்கும், உற்றார் உறவினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கிறோம்.

அதிபரும், ஊழியர்களும்<br>
புனித வளன்<br>
கத்தோலிக்க அச்சகம்<br>
பிரதான வீதி,<br>
யாழ்ப்பாணம்.

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



P. S. ஞானப்பிரகாசம்<br>
(இளைப்பாறிய அதிபர்)

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 30.08.1911 | 23.05.1992 |

"சீவியத்தில் உம்மை<br>
நேசித்தோம்<br>
மரணத்திலும் உம்மை!<br>
மறவோம்"<br>
எங்கள் பாசமிகு பப்பா<br>
நீங்கள் எம்மை பிரிந்து<br>
ஆண்டுகள் ஏழுஆனாலும்<br>
உங்கள் நினைவுடன்<br>
என்றும் நாங்கள்

தகவல் :<br>
A.S.A. அலெக்சாண்டர்<br>
இல. 7 பேக்கறி வீதி,<br>
திருகோணமலை<br>
- 31000

## 3ஆம் மாத நினைவஞ்சலியும் பிறந்தநாள் ஞாபகார்த்தமும்



திருமதி. இரத்தினம் சூசைப்பிள்ளை<br>
(ஒட்டகப்புலம்)

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 23.05.21 | 01.02.99 |

மாதங்கள் மூன்று மறைந்ததம்மா<br>
உன் அன்பு முகம் மறையவில்லை<br>
காலத்தால் அழியாது உள்ளமதில் வாழ்கின்றீர்<br>
ஆண்டவன் மலரடியில் எமக்காய் வேண்டிடுவீர்

5, மாட்டீன் ஒழுங்கை<br>
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்<br>
மக்கள், மருமக்கள்,<br>
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்

## எட்டாவது ஆண்டு நினைவஞ்சலி



அருட்தந்தை M.B. இராயப்பு (O.M.I.)

ஆண்டவன் சந்நிதியில் இளைப்பாறும்<br>
ஆண்டுகள் எட்டு ஓடிவிட்டன அண்ணா!<br>
காண்கின்றோம் அன்பு முகத்தை நாளும்<br>
காலத்தின் பயணத்திலே<br>
குருத்துவப் பணியின் குலவிளக்காய்<br>
கருத்தாய் நீங்கள் வாழ்ந்த வாழ்வு<br>
வருத்தமுற்ற மக்களுக்கு<br>
வசந்தம் நிறைந்ததை மறப்போமோ.<br>
அங்கிள் என்போம் செல்லமாக<br>
தங்கள் வரவில் மனம் மகிழ்வோம்<br>
தங்கிவிட்டீர்கள் இறைவன் பதம்<br>
அங்கிருந்து எமக்காய் இறைஞ்சுங்கள்<br>
வாசம் நீங்கா எழில் மலர் நீங்கள்<br>
வாஞ்சையின் தேனூற்று நீங்கள்<br>
ஈசன் கருணையில் நாங்கள்<br>
இகபர சுகம் பெற வேண்டுங்கள்

அன்னாரின் ஆன்மசாந்திக்காக 6-5-99 வியாழக்கிழமை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

பாலதாஸ் குடும்பத்தினர்<br>
பிலிப் குடும்பத்தினர்

A/19/99

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திரு. சாமிநாதர் அந்தோனிப்பிள்ளை<br>
(ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர், சுதேச வைத்தியர்)

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 28-11-1917 | 09.04.1999 |

"என் யேசுவே என் வாழ்நாளில் உம்மையே விரும்பினேன்<br>
இன்று உமது நிழலில் இருக்கின்றேன்"<br>
மரித்த உமது அடியாரான அந்தோனிப்பிள்ளையின்<br>
ஆத்துமத்திற்கு நித்திய இளைப்பாற்றியை கொடுத்தருளும்.

128, கொழும்புத்துறை வீதி,<br>
பாண்டியன்தாழ்வு<br>
யாழ்ப்பாணம்.

இவரின் பிரிவால் துயருறும்<br>
பிள்ளைகள், மருமக்கள்,<br>
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

## ஓராண்டு நினைவினிலே



திருமதி. பாக்கியநாதர்<br>
அன்னம்மா

| மண்மகிழ | மனம்நெகிழ |
| --- | --- |
| 1925.10.25 | 1998.06.05 |

பொங்கு கதிர்ச் சூரியன்போல்<br>
பொலிந்த முகம் மறைந்ததம்மா<br>
எங்குமெமக் கமைதிதரும்<br>
ஆசை முகம் அயர்ந்ததம்மா<br>
மங்கிடாத புன்முறுவல்<br>
பூத்தமுகம் உறைந்ததம்மா<br>
தங்கியெம் மனிதில் பாடும்<br>
தாயே உன்னைமறவோமம்மா

அன்னையின் ஆன்ம சாந்திக்காக இரங்கல் பலி இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் 10.06.99 அன்று காலை 6.30 மணிக்கு ஒப்புக் கொடுக்கப் படும். இவரின் ஆன்மா நித்திய பேரின்ப வாழ்வை சுவைக்க பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்<br>
குடும்பத்தினர்.

சென் ஜேம்ஸ் வீதி,<br>
இளவாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செபமாலைத்தாசர் சபையின் புதிய ஆச்சிரமம்

செபமாலைத்தாசர் சபையின் புதிய கிளையொன்று வவுனியா, மதவுவைத்தகுளத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய ஆச்சிரமத்தை சித்திரைத் திங்கள் 17ஆம் நாள் சனிக்கிழமையன்று மன்னார் ஆயர் பேரருட்திரு இரா. யோசவ் அவர்கள் ஆசீர்வதித்து திறந்து வைத்தார். இன்றைய எமது நாட்டின் தேவையை உணர்ந்து செப, தவ, பணிகளுக்காக இப்புதிய ஆச்சிரமம் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வைபவத்தில் சிறப்பு விருந்தினராக செபமாலைத்தாசர் சபையின் உயர்தலைவர் அதிவண M. L. அலோசியஸ் C. R. அடிகளார் இந்தியாவிலிருந்து வந்து கலந்து கொண்டார். அதே வைபவத்தில் அருட்சகோதரர்கள் உதயக்குமார், மெல்வின், ஜோர்ச். ஜூட் ஆகியோர் இறைபணிக்காக தங்களை நித்தியத்துக்கும் அர்ப்பணித்தார்கள்.

தோலகட்டி செபமாலை மாதா ஆச்சிரமம் அருட்தந்தை வ. தோமஸ் அ.ம.தி. அடிகளால் 1928ஆம் ஆண்டு செப, தவ வாழ்வு வாழும் துறவற சபையாக ஆரம்பிக்கப்பட்டது. இப்போது இந்தியாவிலும் இலங்கையிலும் இதன் 15 கிளை ஆச்சிரமங்கள் அமைக்கப்பட்டு செப, தவ, பரித்தியாக வாழ்வு வாழப்பட்டு வருகின்றது. அகில உலகிலும் உண்மை, அன்பு, அமைதி நிலவும்படியாக துறவிகள் தமது வாழ்வை அர்ப்பணித்து செபித்து வருவதோடு, இன, மத, மொழி வேறுபாடின்றி மக்களுக்குப் பணியாற்றுகின்றனர்.

## ஜெருசலேம் நகருக்கு நேரடி விமானசேவை

யூபிலி ஆண்டு நிகழ்ச்சிகளையொட்டி இலங்கையிலிருந்து ஜெருசலேம் நகருக்கு விமான சேவை நடத்த ஒரு நிறுவனம் முன்வந்துள்ளது. இலங்கையிலிருந்து பெருந்தொகையான யாத்திரீகர்கள் புனித பூமிக்கு செல்வதாக இருந்தால் அரசாங்கம் இந்த விமான சேவைக்கு அனுமதி அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது ஜெருசலேமுக்கு நேரடி விமான சேவை இல்லாத காரணத்தால் பயணத்தின் செலவு அதிகமாயிருக்கிறது. தாம் ரூபா 30,000க்கு இந்தச் சேவையை நடத்த முடியும் என இந்நிறுவனம் அறிவித்துள்ளது.

## அருட்தந்தை அதிரியான் யோசவ் ஓய்வு பெறுகிறார்

யாழ் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் ஆரம்பகாலம் முதல் விவிலிய விரிவுரையாளராகவும், ஆன்ம வழிகாட்டியாகவும் பணிபுரிந்த அருட்திரு அதிரியான் யோசவ் அ.ம.தி. மேற்படி பணியிலிருந்து ஓய்வுபெற்று வசந்தக இல்லத்தின் பொறுப்பாளராகக் கடமையேற்றுள்ளார்.

இவர் விவிலிய அறிவும். இசையார்வமும் மறையறிவிப்பு வாஞ்சையும், ஆழமான ஆன்மீக வாழ்வம் தமிழ் ஆர்வமும் கொண்டவர். அவரது பணியும் முன்மாதிரியான வாழ்வும் குருத்துவ மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டுதலாக அமைந்தன.

அடிகளின் பிரியாவிடை வைபவத்தின்போது உரையாற்றிய குருத்துவக் கல்லூரி அதிபர் அருட்திரு நீக்கிலஸ் அவர்கள், பல துறைகளிலும் பாண்டித்தியம் பெற்ற அருட்தந்தை அதிரியான் அவர்கள் தமது வயோதிப காலத்திலும் விடாமுயற்சியுடன் செய்துவந்த பணி குருமட மாணவர்களுக்கும், குருக்களுக்கும் ஓர் ஆர்வத்தையும், ஊக்கத்தையும் தருவதாகக் கூறி அவரது சேவைக்காக நன்றி தெரிவித்தார்.

பிரியாவிடை நாயகராகிய அதிரியான் அடிகள் தமது சேவை சவேரியார் குடும்பத்திற்கு தொடர்ந்து கிடைக்கும் எனக் கூறி விடை பெற்றார்.

குருமாணவர்கள் ஒரு கையேட்டு நினைவு மலரை அன்பளிப்புச் செய்து தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

தகவல்: அருட்சகோ. எஸ். ஏ. றொஷான்

## மாதா கூட்டத்தின் வைரவிழா

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய மாதா கூட்டம் தனது 60வது ஆண்டை அண்மையில் பூர்த்திசெய்துள்ளது.

இக்கூட்டம் 1939ஆம் ஆண்டு வைகாசி 1ஆம்திகதி அருட்தந்தை பி. வஸ்தியாம்பிள்ளை அவாகளால் ஆரம்பிக்கப்பட்டது.

மாதா கூட்டத்தினர் சனிக்கிழமை தோறும் காலையில் திருப்பலி முடிந்தும் செபமாலை ஓதி ஆலயத் திருப்பணிகளைச் செய்து வருகின்றனர். ஆலயத்திலும் வீடுகளிலும் சந்தர்ப்பங்களுக்கேற்ற வழிபாடுகளை நடத்தி வருகின்றனர். பங்குத் தந்தையர்களாலும் திருக்குடும்ப அருட்சகோதரிகளாலும் ஆன்மீக வாழ்வில் வளர்க்கப்படுகின்றனர்.

வைரவிழாவைக் கொண்டாடுமுகமாக வணக்க மாத முடிவில் திரிதின ஆராதனையும், நன்றித் திருப்பலியும், திருச்சுருபப் பவனியும் இடம்பெறும். இளைஞரின் மத்தியில் மாதாவின் பக்தியை வளர்க்கும் பொருட்டு இளைஞர்களே மாதாவின் திருச்சுருபத்தைத் தாங்கிய ரதத்தை இழுத்துச் செல்வார்கள்.

முதிய அங்கத்தவர்கள் அன்பளிப்புக்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள்.

தகவல் : திருமதி ஹெலன் பெர்னான்டோ

## மிருசுவிலில் குணமாக்கல் வழிபாடு

கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு இருதயதாஸ் அடிகளாரினால் கடந்த 20.04.99 காலை மிருசுவில் புனித நிக்கொலார் ஆலயத்தில் குணமாக்கல் வழிபாடு ஒன்று நிறைவேற்றப்பட்டது.

கிளாலி, பளை, முகமாலை, கச்சாய், சாவகச்சேரி பங்குகளைச் சேர்ந்த பலர் இவ்வழிபாட்டில் கலந்துகொண்டு பலன் பெற்றனர்.

மிருசுவில், தவசிகுளம் ஆலயங்களைச் சேர்ந்த பங்கு மக்கள் இக்குணமாக்கல் வழிபாட்டில் கலந்துகொள்ள பெரும் ஆர்வமாக இருந்தபோதிலும் அன்றைய தினம் மிருசுவில் உசன் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டை முன்னிட்டு அவர்கள் வீடுகளைவிட்டு வெளியேற அனுமதிக்கப்படாமையினால் பெரும் ஏமாற்றமடைந்தனர்.

## சமாதானம் இன்னும் சாத்தியமே

~ அருட்திரு அல்பிறட் அலெக்ஸ்சாண்டர்

சமாதானத்தின் பொருட்டு பன்முறை வடக்கிற்கு பயணங்களை மேற்கொண்டு பலருடன் உரையாடியவர் திவ்விய நற்கருணை சபையைச் சேர்ந்த அருட்தந்தை அல்பிரட் அலெக்சாந்தர் அண்மையில் இவர் சண்டே லீடர் என்னும் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் சமாதானம் இன்னும் சாத்தியமானதே என்னும் தமது நம்பிக்கையைத் தெரிவித்தார்.

சர்வமத பெரியார்களின் தூதுக்குழு வன்னிக்குச் சென்றதன்பின் இந்த நம்பிக்கை மீண்டும் தளிர்த்துள்ளதாகக் கூறிய அவர். இன்று நாட்டின் சமூக, பொருளாதார முன்னேற்றத்தை தமது பிடிக்குள் வைத்திருக்கும் அதிகார நலக் கும்பல்களைத் தவிர்த்து, வடக்கும் தெற்கும் சமபங்காளிகளாக சமாதானத்திற்காக உழைக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

மேலும் அவர் தமது பேட்டியின் போது தெரிவித்த கருத்துக்களாவன:

"கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் தோல்வியுற்றதற்குக் காரணம் இரு பக்கத்திலும் காணப்படும் பரஸ்பர நம்பிக்கையின்மையே. இது கடக்க முடியாத ஒரு பிளவை ஏற்படுத்தியுள்ளது. இன்றைய நிலையில் இருதரப்பினரும் தமது நிலைப்பாட்டிலிருந்து இறங்கிவரப் போவதில்லை. எனவே நாட்டிலுள்ள வேறு பெரியார்கள் நடுநிலையிலிருந்து. இரு தரப்பினரையும் சமாதான முயற்சிகளுக்கு இணங்குவிப்பதற்கு தொடர்ந்து உழைத்து வந்தால் பலனேற்படலாம்.

பிரச்சினையிலிருந்து நழுவிச் செல்வதன் மூலம் உண்மையான சமாதானத்தை அடைந்துவிட முடியாது. இரு பக்கத்தாரும் சமாதானத்துக்காக ஈடுபாட்டுடன் உழைக்கவும் தியாகங்களைச் செய்யவும் தயாராக இருக்க வேண்டும். போருக்காக தியாகங்களைச் செய்வதோ. வன்முறையோ சமாதானத்தைக் கொண்டுவரப் போவதில்லை. அனைவருக்கும் நீதி, யார்மட்டிலும் தப்பெண்ணமின்மை என்ற மனப்பாங்கில் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

பரஸ்பர நல்லெண்ணத்தைப் பரிமாறிக் கொள்வதற்கு இருக்கும் தடைகள் நீக்கப்படுவதே சமாதானம் ஏற்படுவதற்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தும்.

## நான் மிகவும் நேசித்த வன்னி மக்களுக்கு சேவையாற்றும் சந்தர்ப்பம் எனக்கு வழங்கப்பட்டுள்ளது.

~ அருட்திரு யூட் அமலதாஸ் ~

கடந்த 18.4.99 அன்று மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் நடைபெற்ற பிரியாவிடை வைபவத்திலே உதவிப்பங்குத் தந்தை யூட் அமலதாஸ் நன்றி தெரிவித்துப் பேசுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த 10 மாத காலமாக மிருசுவில் உதவிப் பங்குத்தந்தையாகக் கடமையாற்றிய அருட்திரு. யூட் அமலதாஸ் அவர்கள் முல்லைத்தீவுக்கு மாற்றலாகிச் செல்வதால் அவரது சேவையினைப் பாராட்டி பங்கு மக்களால் இப் பிரியாவிடை வைபவம் நடத்தப்பட்டது. இவ்வைபவத்துக்கு பங்குத்தந்தை எரிக் றொஷான் அவர்கள் தலைமை வகித்தார்.

வைபவத்தின் போது அருட்தந்தை எரிக் றொஷான், மிருசுவில் றோ.க.த.க பாடசாலை அதிபர் திரு. F. X. அன்ரன் ஆகியோர் உரையாற்றினர். பளை, முகமாலை போன்ற இடங்களில் அவரது சிறப்பான பணிகளைப் பாராட்டி அவரது புதிய பணிக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

## பளை அரசினர் வைத்தியசாலையில் செபக்கூடம்

பளை அரசினர் வைத்தியசாலையில் புதிதாக கத்தோலிக்க செபக்கூடமொன்று தற்போது அமைக்கப்பட்டு வருகின்றது.

பளைப் பகுதிக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்த மிருசுவில் உதவிப் பங்குத்தந்தை அருட்திரு ஜூட் அமலதாஸ் அடிகளார் இச் செபக்கூடத்திற்கான ஆரம்ப வேலைகளை அண்மையில் ஆரம்பித்து வைத்திருந்தார்.

பளை அரசினர் வைத்தியசாலையில் பணிபுரியும் கத்தோலிக்க ஊழியர்கள் மற்றும் இப்பகுதி கத்தோலிக்க மக்களின் முயற்சியினாலும், உதவியினாலும் இச்செபக்கூட அமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தகவல் F.X. கிறிஸ்ரி ரஞ்சன்

## பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்திருவிழா

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா வழமை போல் எதிர் வரும் ஆனித் திங்கள் 4ம் நாள் ஆரம்பமாகி 13ஆம் நாள் மேன்மை தங்கிய ஆயர் அவர்களின் திருநாட்பலியுடன் நிறைவுறும். வழிபாடுகள் தினமும் பிற்பகல் 5.30 மணிக்கு ஆரம்பமாகும். 12ஆம் திகதி நற்கருணை விழாவோடும், பவனியும் இடம்பெறும். 13ஆம் திகதி காலை 7 மணிக்கு திருநாட் திருப்பலி ஆயர் அவர்களால் ஒப்புக்கொடுக்கப்படும். தொடர்ந்து புனிதரின் தேர்ப்பவனி இடம் பெறும்.

## ரஷ்யாவில்: கத்தோலிக்க திருச்சபை

ரஷ்யாவில் அண்மையில் ஏற்படுத்தப்பட்டுள்ள 4 அங்கத்தவரைக் கொண்ட கத்தோலிக்க ஆயர் பேரவை ரஷ்ய ஒர்த்தொடொக்ஸ் சபையுடன் நெருங்கிய உறவுகளை வளர்க்க விருப்பம் தெரிவித்துள்ளது.

"இறைவனது துணையுடன் பிளவுகள். அவநம்பிக்கைகள், தப்பெண்ணங்கள் ஆகிய தடைச் சுவர்களை தகர்த்தெறிய எம்மாலான மட்டும் முயல்வோம்" என சென் பீற்றர்ஸ்பர்க்கில் நடை பெற்ற ஆயர் பேரவையின் முதற் கூட்டத்தில் கூறப்பட்டது.

ஆயினும் இவ்விரு திருச்சபைகளிடையேயும் உறவுகள் சீர்கெட்டு வருவதாகவும் யூபிலி விழாவை ஒன்றிணைந்து கொண்டாட ரஷ்ய திருச்சபையின் எதிர்ப்பு மனப்பான்மை இடமளிக்காது எனவும் பிதா ஷஜ்கீவ்ச் என்பவர் வார்சாவில் கூறியுள்ளார்.

இரண்டு நிர்வாகப் பிரிவுகளாக இயங்கிவரும் கத்தோலிக்க திருச்சபையில் 123 பங்குகள் உண்டு. குருக்களின் எண்ணிக்கை 184. ஒரேயொரு குருமடம் ஏறத்தாழ 40 குரு மாணவர்களைப் பயிற்றி வருகிறது.

ஆனால் 127 மறை மாவட்டங்களைக் கொண்ட ரஷ்யத் திருச்சபை 19,000க்கு மேற்பட்ட பங்குகளையும் 19,800 குருக்களையும் கொண்டது.

கத்தோலிக்க பங்குகளில் எட்டுப் பங்குகள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன. ரஷ்யப் பிரஜைகளான எட்டுப்பேரைத் தவிர, ஏனைய குருக்களும் கன்னியரும் மூன்று மாதத்துக்கொரு முறை நாட்டைவிட்டு வெளியேறி, புதிய விஸாக்கள் பெற்று மீண்டும் வரவேண்டியிருக்கிறது.

## இலங்கையின் மிகப் பழைய சஞ்சிகை

இலங்கையின் மிகப் பழைய சஞ்சிகையாகிய "பக்திப் பிரபோதனய" ஜனவரி 99இல் நூறு ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது. இது ஒரு கத்தோலிக்க மாதாந்த வெளியீடாகும்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதானவீதி 360 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் ஒவ்செற் முறையில் 1999ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது P 197

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org